# மூடப்பட்டிருந்ததை தொடர்ந்து பணிகளை மீள

## ஆரம்பிப்பதற்கான குறிப்புகள்

v 1.0 - 21/05/2020

Covid-19 வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் இலங்கை அரசாங்கம் நாடு முழுவதையும் முடக்கிய நிலையில் பேணியிருந்தது. இதன் காரணமாக பல வியாபாரங்கள், நிறுவனங்கள், உற்பத்தி பகுதிகள் போன்றன தமது பணிகளை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தன. 6 வாரங்களுக்கு மேலான காலப்பகுதி முடக்கப்பட்ட நிலையில் பேணப்பட்டுள்ள நிலையில், இந்த முடக்கநிலை தளர்த்தப்பட்டவுடன் பல வியாபாரங்கள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க தயாராகவுள்ளன.

இந்த அவசரநிலை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும், குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இயங்காமலிருந்த பின்னர் உற்பத்தி செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் போது தீ, வெடிப்பு அல்லது இயந்திரசாதனங்கள் பழுதடைதல் போன்ற இழப்புகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமானதாக அமைந்திருக்கும். இதன் பிரகாரம், ஆரம்பிக்கும் முன்னதாக மேற்கொள்ளக்கூடிய பாதுகாப்பு மீளாய்வுகளினூடாக, இந்த வியாபாரங்களுக்கு இழப்புகளை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இங்கு குறிப்பிடப்படும் பொது விடயங்கள் ஏனைய சில துறைகளைச் சேர்ந்த வியாபாரங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும்.

எழக்கூடிய அனர்த்தங்களில், தீ ஏற்படக்கூடிய இடர் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும். தீ இனங்காணல் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் செயலாற்றும் நிலையிலிருப்பதை உறுதி செய்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பின்வரும் முற்காப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படலாம்:**

**கடந்த கால செயற்பாடுகளின் பின்னரான மாற்றங்கள்:**

- முடக்கலுக்கு முன்னதான செயற்பாடுகளின் போதும், தற்போதும் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை இனங்காணவும் - சாதனங்கள், வடிவமைப்பு, மூலப் பொருட்கள், தொழிற்படும் சூழல் போன்றன.
- இடர் மதிப்பீடுகள், தொழிற்படும் செயன்முறைகள் மற்றும் பயிற்சிப் பொருட்கள், வியாபார தொடர்ச்சித்தன்மை நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் இதர ஆவணங்களை மீளாய்வு செய்து மெருகேற்றவும்.

**ஊழியர்கள் மற்றும் வளங்கள்:**

- பிரதான நபர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் பணிக்கு தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- ஆகக்குறைந்த ஊழியர்களின் சமூகமளிப்பை உறுதி செய்தல்.
- ஆபத்து வெளிப்படக்கூடிய பகுதியில் நபர்களை குறைக்கும் வகையில், மீள ஆரம்பிக்க அத்தியாவசியமாக தேவைப்படும் நபர்களை மட்டும் கொண்டிருப்பது.
- புதிதாக எழக்கூடிய ஆபத்துக்கள் பற்றி கலந்தாலோசித்து அவற்றை தவிர்க்கும் வழிமுறைகளை அமுல்ப்படுத்தல். அத்தியாவசிய இயந்திரங்கள் மற்றும் செயன்முறைகள்/அவசர செயற்பாடுகள் போன்றவற்றை மீள ஆரம்பிக்கும் முன்னர் உடனடியாக மீட்சிப் பயிற்சிகளை முன்னெடுத்தல்.
- ஒப்பந்த பணியாளர்கள் தொடர்பில் சிறந்த கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையை பேணுதல்.

**இயந்திரசாதனங்கள்:**

- ஏதேனும் இயந்திரசாதனம் செயற்படுத்தப்படாமல் இருந்தால், OEM வழிமுறைகளின் பிரகாரம் பரிசோதனை/பராமரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் மீள இயக்க முன்னர் தேவையான உராய்வு எண்ணெய் இடல் போன்றவற்றை கவனத்தில் கொள்ளவும்.
- தேவையான துப்புரவாக்கல் அல்லது தொற்றுநீக்கல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- அத்தியாவசிய கட்டமைப்புகள் பரிசோதிக்கப்பட்டு அவை சிறந்த நிலையில் இருப்பதை உறுதி செய்யவும். குறிப்பாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த சாதனங்கள் மீது அதிகளவு கவனம் தேவை.
- சகல இயந்திரங்கள், செயன்முறை பாதுகாப்புகள், அலார்ம்கள் மற்றும் இன்டர்லொக்கள் போன்றன சேவையில் இருப்பதை உறுதி செய்யவும்.
- மீள ஆரம்பித்தல் செயன்முறைகளை முறையாக பின்பற்ற வேண்டும்.
- படிப்படியான பரிசோதனைகளைத் தொடர்ந்து சகல சிக்கல்கள் நிறைந்த உற்பத்தி செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

- எரிபொருள்-வாயு ஆபத்து நிறைந்த சாதனங்கள் தொடர்பில் விசேட கண்காணிப்பு தேவை (பொயிலர்கள், கில்ன்ஸ் போன்றன எரியூட்டப்படும் சாதனங்கள் போன்றன).

**தீ மூட்டும் மூலங்கள்:**

- வெப்பப் பணி, புகைத்தல், வெப்பமாக்கிகள், பற்றரியில் இயங்கும் சாதனங்கள் தொடர்பில் முறையான செயன்முறைகளை பயன்படுத்தல்.
- மின்சுற்று பரிசோதனை, பரீட்சார்த்தம் மற்றும் பராமரிப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்தல்.

**தீ பாதுகாப்பு மற்றும் அவசர நிலைமைகளில் செயலாற்றல்:**

- தீ பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் விசேட பாதுகாப்பு கட்டமைப்புகள் சேவையாற்றக்கூடிய நிலையில் இருப்பதை உறுதி செய்தல் (புகை இனங்காணல், தீ அணை கருவிகள், ஸ்பிரிங்க்லர் கட்டமைப்புகள், டிலஜ் கட்டமைப்புகள், நீர் விசிறிகள் போன்றன). அவற்றை ஒரு பகுதியிலிருந்து கண்காணிக்கக்கூடிய கட்டமைப்புகளும் இயங்கும் நிலையிலிருப்பதை உறுதி செய்யவும்.
- தீ முன்னேற்பாட்டு திட்டங்களின் துல்லியத்தன்மையை மீளாய்வு செய்தல்.
- போதியளவு அத்தியாவசிய பதிலளிப்புகள் மற்றும் சாதனங்கள் இருப்பதை உறுதி செய்தல்.
- தேவையெனில், செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான திட்டத்தை உள்ளூர் தீயணைப்பு பிரிவுக்கு அறிவிக்கவும்.

**அலுவலக பேணுகை:**

- குறிப்பாக அநாவசிய அகற்றிக் கொள்ளக்கூடிய கழிவுப்பொருட்களை நீக்கி, சகல பகுதிகளும் தூய்மையாகவும் தெளிவாகவும் இருப்பதை உறுதி செய்யவும்.
- ஆரம்பிக்கும் முன்னதாக குறித்தபகுதியில் நேரடி பார்வை விஜயமொன்றை மேற்கொள்ளவும் - கட்டிடங்கள், இயந்திரங்கள், களஞ்சிய பகுதிகள், தீயணைப்பு சாதனங்கள், அவசர கட்டமைப்புகள் மற்றும் ஆவணங்கள் போன்றன அடங்கலாக.
- மீள ஆரம்பிக்கும் போதும் மீள களஞ்சியப்படுத்தும் போதும் சிறந்த களஞ்சியப்படுத்தல் செயன்முறைகளை பின்பற்றவும் - தெளிவான எய்சில் பகுதிகள், செயலற்றிருக்கும் பலெட்களின் களஞ்சியப்படுத்தல்களை தவிர்த்தல்/குறைத்தல், பொருத்தமற்ற மூலப்பொருட்களை பிரித்தல், இரசாயன அல்லது ஆபத்தான களஞ்சியப்படுத்தல் பகுதியில் MSDS ஐ பின்பற்றல்.

**அணுகல் மற்றும் பாதுகாப்பு:**

- போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளமையை உறுதி செய்தல்.
- இயங்காத காலப்பகுதியில் வளர்ந்திருக்கக்கூடிய தாவரப்பகுதிகளை வெட்டி அகற்றல்.
- வளாக களஞ்சியப்பகுதி குறைந்தளவில் இருப்பதுடன், கட்டிடங்களுக்கு அப்பால் இருப்பதையும் உறுதி செய்தல்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகளுக்கு:**
லலீந்திர விக்ரமசிங்க, சிரேஷ்ட முகாமையாளர் - இடர் பொறிக்கட்டமைப்பு
மொபைல்: 0777 238 034 | மின்னஞ்சல்: laleendraw@fairfirst.lk

**மறுதலிப்பு:** உங்களின் தகவலுக்காக மாத்திரம் இந்த ஆவணத்தின் பொருளடக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆலோசனையாக அமைந்திருக்கவில்லை. எனவே, இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முன்னதாக, நிபுணத்துவம் வாய்ந்த மூலத்திடமிருந்து ஆலோசனையை பெறுமாறு உங்களுக்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

*corporatesolutions.swissre.com இல் வெளியிடப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

